1980 ஜூலை 31]

சங்கத்தின் ஜவுளிகள், மூலப் பொருள் மற்றும் கொடுபட வேண்டிய இனங்களில் கையாடல் நடைபெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில், அரசுக்கு வரவேண்டிய பணமும் இல்லை, வங்கிகளுக்கு வரவேண்டிய பணமும் இல்லை. தனி மூலதனச் சொத்தை வைத்து செய்தபடியால் அவர்களுக்குள்ளே நடந்த சமாச்சாரம்.

(முற்பகல் 9-50.)

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இரண்டு இலட்சத்துக்கு மேல் இந்த சங்கத்திலே ஊழல் நடந்திருக்கிறது. இதை காலங்கடந்து கண்டுபிடிக்கக் கூடிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? கூட்டுறவு விதி 65—ன்படி நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்கள். இந்த 65-வது விதி திருத்தப்படுமா? இன்றைக்கு கூட்டுறவு சட்டங்கள் திருத் தப்படும்போது இந்த 65—வது விதியின் நிலை என்ன? அப்படி இந்த விதி மேலும் திருத்தப்படுகின்ற நிலையில் என்ன தண்டனை விதிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோர்ட்டிலே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த விதியை திருத்துவதற் கான தேவை இருந்தால், அது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இந்தக் கையாடல் ஏற்பட்ட பணம் அரசுக்கும் வங்கிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் மூலதனத்தையே சாப்பிட்டிருக்கிறார்கள். அதை அந்த நபரிடம் இருந்து வசூலித்து, அந்த சொஸைட்டிக்கு சேர்ப்பிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேல் நிலைப் பள்ளிகளில் தொழிலாசிரியர்கள்

*கு. கா. வி. எண் 52—திரு. ரா. கு. பெருமாள்: மாண்பு மிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) மேல் நிலைப்பள்ளிகளில் முழு நேர தொழில்கல்வி ஆசிரியர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இல்லை; ஏனெனில் முழு நேரத் தொழிலாசிரியர்களை நியமிப்பதைவிட தொழிலைச் சார்ந்தவர்கள் பகுதிநேர ஆசிரியராக இருப்பது மிகுந்த பயனைக் கொடுக்கிறது.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பித்ததற்குப் பின்னாலே பி. யு. சி. வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொண்டு வந்த ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் வேலை கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் வேலை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பி.யு.சி. வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்கு நாம் அங்கேயே பணிப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கு வேலை அளிக்கின்ற முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

திரு. க. பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற தொழில் ஆசிரியர்கள் பகுதி நேரம் வேலை செய்வது சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் பகுதி நேரமே வேலை செய்தாலும் முழு நேர ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் அத்தனையும் அவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவர் அவர்களே, இது மேல்நிலைப் பள்ளியிலே தொழில் கல்வி ஆசிரியர்களைப் பற்றிய கேள்வி. அந்தத் தொழில் கல்வி ஆசிரியர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் என்ற முறையிலே எல்லா மாவட்டத்திற்கும் நியமிக்கும் வகையில், டிரெயினிங் கொடுக்கப்பட்டு 3 பேர்களை டெல்லிக்கு அனுப்பினார்கள். அவர்கள் டிரெயினிங் முடிந்து வந்துவிட்டார்கள். அப்படி டிரெயினிங் முடித்து வந்தவர்கள் வேலைக்கு நியமிக்கப்பட்டு விட்டார்களா? அப்படி நியமிக்கப்படாததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.